**கவனிக்க.**- 03.01.2025 ஆந் திகதிய 2418 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி I: தொகுதி (II ஆ) (தமிழ் மொழிமூலம்) மற்றும் பகுதி II (தமிழ்மொழிமூலம்) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2419 - 2025 ජනවාරි මස 10 වැනි සිකුරාදා - 2025.01.10

2419 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 22 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**
**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2025, சனவரி மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, சனவரி மாதம் 17 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கே. ஜீ. பிரதீப் புஷ்ப குமார**,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


19 - B 82644- 403 (2025/01)

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள்** :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை** :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்** :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை** :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை** :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

## பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

- I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
- II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
- III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
- IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
- V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
- VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
- VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
- VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/ கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    - (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    - (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    - (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        - (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        - (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    - (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    - (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    - (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    - (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    - (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    - (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    - (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    - (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    - (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    - (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.**

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை,**
**பத்தரமுல்லை.**

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு

## இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரம் III உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2025

இலக்கம் 1925/37 மற்றும் 2015.07.28 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கமைய இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரம் III உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2025 மாச்சு மாதத்தில் கொழும்பில் நடைபெறும் என இத்தால் அறியத்தரப்படுகின்றது.

விண்ணப்பப் படிவம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk இணையத் தளத்தின் "Our Services" பகுதியின் கீழுள்ள "Online Applications- Recruitment Exams/E.B. Exams" இல் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன், விண்ணப்பப் படிவங்கள் நிகழ்நிலை (Online) மூலமாக மாத்திரமே சமர்ப்பிக்கப்பட முடியும். விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் பணிகள் 2025, சனவரி மாதம் 10 ஆந் திகதி மு.ப 9.00 மணிக்கு ஆரம்பிக்கப்படும் என்பதுடன் 2025, பெப்ருவரி மாதம் 14 ஆந் திகதியன்று பி.ப. 9.00 மணிக்கு நிறைவடையும். விண்ணப்பப் படிவத்தை நிகழ்நிலை மூலமாக சமர்ப்பித்த பின்னர் அதனை பதிவிறக்கம் செய்து அதன் அச்சுப் பிரதியின் உரிய பகுதியை கையெழுத்துக்களால் பூரணப்படுத்தி விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தி, உரிய நிறுவனத் தலைவரின் சான்றுப்படுத்தலுடன் விண்ணப்ப இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு கிடைக்கும் வகையில் பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

இப் பரீட்சைக்குரிய பாடத்திட்டம் மற்றும் ஏனைய விதிமுறைகள் மேலே குறிப்பிடப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பின் அட்டவணை III இன் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்களது வசதி கருதி அப் பாடத்திட்டம் மற்றும் ஏனைய விதிமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன.

உத்தியோகத்தர் ஒருவருக்கு இந்த வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்குரிய அனைத்துப் பாடங்களுக்கும் ஒரே அமர்வில் அல்லது தனித்தனியாக வெவ்வேறு சந்தர்ப்பங்களில் தோற்ற முடியும்.

02. பரீட்சை விதிகள் – எழுத்து மூலப் பரீட்சை

| *பாட இலக்கம்* | *பாடம்* | *புள்ளிகள்* | *காலம் (மணி)* |
|---|---|---|---|
| 01 | பொது முகாமைத்துவம் மற்றும் தாபனச் செயற்பாடுகள் | 100 | 1 1/2 |
| 02 | நிதிப் பிரமாணங்கள் | 100 | 1 1/2 |
| 03 | கல்வி மறுசீரமைப்பு மற்றும் கல்விச் சட்டங்கள் | 100 | 02 |
| 04 | Communication Skills | 100 | 02 |

03. பாடத்திட்டம்

| *பாட இலக்கம்* | *பாடம்* | *பாட உள்ளடக்கம்* |
|---|---|---|
| 01 | பொது முகாமைத்துவம் மற்றும் தாபனச் செயற்பாடுகள் | அரச தாபன விதிக் கோவையின் I, II, III, IV, V, VII, VIII, IX, XII, XIII, XIV, XXIV, XXVIII, XXX மற்றும் XXXI ஆகிய அத்தியாயங்கள் மீது விசேட கவனத்துடன், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதிகள் I, III, IV, V, VI, VIII, X மற்றும் XII ஆகிய அத்தியாயங்கள் மீது விசேட கவனத்துடன் |
| 02 | நிதிப் பிரமாணங்கள் | அரசின் நிதிப் பிரமாணக் குறிப்பின் 1 ஆம் பகுதியின் I, II, V, VIII, XII மற்றும் XIV ஆகிய அத்தியாயங்கள் மீது விசேட கவனத்துடன் |

| *பாட இலக்கம்* | *பாடம்* | *பாட உள்ளடக்கம்* |
|---|---|---|
| 03 | கல்வி மறுசீரமைப்பு மற்றும் கல்விச் சட்டம் | பரீட்சை விண்ணப்பதாரர்களது கீழே குறிப்பிடப் பட்டுள்ள கட்டளைச் சட்டங்கள் மற்றும் பாராளுமன்ற சட்டங்கள் தொடர்பிலான அறிவு பரிசோதிக்கப்படும்.<br><br>i. 1972 கல்வி மறுசீரமைப்பு (கல்வியின் புதிய பாதை)<br>ii. 1981 கல்வியின் வெண் பத்திரம்<br>iii. 1992 தேசிய கல்வி ஆணைக்குழுவின் முதலாவது அறிக்கை<br>iv. 1997 புதிய கல்வி மறுசீரமைப்பு<br>v. 1999 முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட புதிய கல்வி மறுசீரமைப்பு (ஆரம்ப, இடைநிலை மற்றும் க.பொ.த (உ.த.))<br>vi. 1976 ஆம் ஆண்டின் இலக்கம் 15 உடைய பொதுப் பரீட்சைகள் (திருத்தம் செய்யப்பட்ட) சட்டத்தின் திருத்தம் செய்யப்பட்ட 1968 ஆம் ஆண்டின் இலக்கம் 25 உடைய பொதுப் பரீட்சைகள் சட்டம்<br>vii. 1986 ஆம் ஆண்டின் இலக்கம் 28 உடைய தேசிய கல்வி நிறுவகச் சட்டம்<br>viii. 1986 ஆம் ஆண்டின் இலக்கம் 30 உடைய கல்வியியல் கல்லூரிச் சட்டம்<br>ix. 1991 ஆம் ஆண்டின் இலக்கம் 19 உடைய தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டம்<br>x. 1997 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க தேசிய ஆசிரியர் கல்வி அதிகாரசபைச் சட்டம்<br>xi. 13 ஆம் திருத்தம் மற்றும் அடிப்படை உரிமைகள் தொடர்பான 3 ஆம் அத்தியாயத்தின் மீது விசேட கவனத்துடன் இலங்கையின் அரசி யலமைப்புச் சட்டம்<br>xii. கல்விக்குரியதான மாகாணங்களால் விதிக்கப் பட்டுள்ள பிரகடனங்கள் |
| 04 | Communication Skills | This is to assess the English language competence of the following subject areas.<br>- **English Grammar** :-<br>Tense and Number, Sentences (Simple/ Compound / Complex / Compound Complex), Relative Clauses, Adjectives and Adverbs, prepositions<br>- **Listening and speaking Skills** :-<br>General Greetings and Introductions, Giving and getting information, Advising, Suggesting and Expressing Opinions, Telephone Skills, Interviewing Skills, Meeting<br>- **Writing Skills** :-<br>Internal modes of communication, Formal correspondence skills, Writing Descriptions/ Explanations, Summary Writing skills, Report Writing skills |

**கருத்தில் கொள்க**: பரீட்சார்த்திகள் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைவதற்காக ஒவ்வொரு வினாத் தாள்களுக்கும் 40% புள்ளிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

***குறிப்பு***:- பட்டம், பட்டப் பின் டிப்ளோமா அல்லது பட்டப் பின் பட்டத்தை ஆங்கில மொழி மூலத்தில் தொடர்ந்திருக்கும் பட்சத்தில் இவ் வினைத்திறன்காண் தடைதாண்டலின் கீழ் உள்ள ஆங்கிலப் பாடத்தில் சித்தியடைவதற்கான தேவையிலிருந்து விடுவிக்கப்படுவர்.

04. **பரீட்சை மொழி மூலம்:**

4.1 இப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் நடைபெறும். பரீட்சைக்கு விண்ணப்பித்த மொழி மூலம் பின்னராக மாற்றம் செய்யப்பட இடமளிக்கப்படமாட்டாது.

4.2 இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையில் இணைவதற்கு தகைமை பெற்ற மொழி மூலத்தையே இப் பரீட்சைக்குரிய மொழி மூலமாகவும் தெரிவு செய்தல் வேண்டும்.

4.3 விண்ணப்பதாரர் ஒருவர் தமக்கு உரித்தற்ற மொழி மூலம் ஒன்றில் பரீட்சைக்கு தோற்றுவது வெளிப்படுத்தப்படும் பட்சத்தில் அவரது பரீட்சார்த்தி எனும் அந்தஸ்து இரத்துச் செய்யப்படும்.

05. நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பப் படிவம் ஆங்கில மொழியிலேயே பூரணப்படுத்தப்படல் வேண்டும். விண்ணப்பதாரர் நிகழ்நிலை மூலமாக சமர்ப்பித்த மென் பிரதி மற்றும் பதிவுத் தபால் மூலமாக அனுப்பிவைக்கப்பட்ட அச்சுப் பிரதி (Printout) ஆகிய இரண்டும் பரீட்சைத் திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்ற பின்னர் அம் மென் பிரதி மற்றும் அச்சுப் பிரதி ஆகியவற்றை சரிபார்த்து (Verify) செல்லுபடியான விண்ணப்பப் படிவம் என்பதாக பரீட்சைத் திணைக்களத்தினால் ஏற்றுக் கொண்டமை தொடர்பில் நிகழ்நிலை முறைமையினுள் பிரவேசிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட கையடக்கத் தொலைபேசிக்கு குறுந்தகவல் (SMS) ஒன்றின் மூலம் அல்லது மின்னஞ்சல் (E-mail) முகவரிக்கு அறியத் தரப்படும். நிகழ்நிலை விண்ணப்பப் படிவத்தை பூரணப்படுத்த முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள ஆலோசனைப் படிவத்தை (Instructions) பதிவிறக்கம் செய்துகொள்ளவும். விண்ணப்பப் படிவத்தை பூரணப்படுத்தும் போது அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளை முறையாக பின்பற்றவும். விண்ணப்பப் படிவத்தின் அச்சுப் பிரதியொன்றைப் பெற்ற பின்னர் அதில் செய்யப்படும் எந்தவொரு திருத்தங்களும் செல்லுபடியான திருத்தங்களாக கருத்தில் கொள்ளப்படமாட்டாது. பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப் படிவங்கள் எந்தவித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியின் பின்னராக கிடைக்கப்பெறும் விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இப் பரீட்சைக்கு விசேட தேவைகளுடன் கூடிய விண்ணப்பதாரர்கள் தோற்றுவார்களாயின் அது தொடர்பில் விண்ணப்பப் படிவத்தில் கட்டாயமாக குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன், உரிய மருத்துவச் சான்றிதழ்களின் பிரதிகளும் விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

06. இப் பரீட்சையானது பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் கொழும்பில் நடாத்தப்படும் என்பதுடன், பரீட்சையை நடாத்துவதற்காக அவரால் விதிக்கப்படும் சட்ட விதிமுறைகளை பின்பற்றுவதற்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட வேண்டும்.

07. போலியான தகவல்களை வழங்குவதற்கான தண்டனை – விண்ணப்பப் படிவத்தைப் பூரணப்படுத்தும் போது மிகுந்த கவனத்துடன் சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இப் பரீட்சைக்குரிய விதிமுறைகளுக்கு அமைவாக எவரேனும் ஒரு பரீட்சார்த்தி தகுதியற்றவர் என்பதாக, போலியான தகவல்களை வழங்கியுள்ளார் என்பதாக வெளிப்படுத்தப்படும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் வேளையில் அல்லது பரீட்சைக்கு பின்னர் என எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்தி அந்தஸ்து இரத்துச் செய்யப்படலாம்.

08. விண்ணப்பப் படிவத்தின் அச்சுப் பிரதி 2025 பெப்புருவரி மாதம் 14 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னராக "பரீட்சை ஆணையாளர் நாயகம், நிறுவனப் பரீட்சைகள் ஒழுங்குபடுத்தல் கிளை, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், தபால் பெட்டி இலக்கம் 1503, கொழும்பு." எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாக அனுப்பிவைத்தல் வேண்டும். அத் தினத்தின் பின்னராக அனுப்பிவைக்கப்படும் விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரம் III உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2025" என்பதாக குறிப்பிட்டு அனுப்பிவைத்தல் வேண்டும்.

09. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் அனைத்து பாடங்களின் போதும் பரீட்சை மண்டப பிரதானி திருப்தியடையக் கூடிய வகையில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். அதற்காக கீழ்வரும் ஏதேனும் ஒரு ஆவணம் ஏற்றுக் கொள்ளப்படும்.

I. தேசிய ஆளடையாள அட்டை
II. செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச் சீட்டு
III. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்

அவ்வாறே பரீட்சார்த்திகள் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் முகம் மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் உபகரணங்கள் அணியப்படவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்காக இரண்டு காதுகள் போன்றனவற்றை

மறைக்காமல் பரீட்சை மண்டபத்தினுள் நுழைய வேண்டும். அச் சட்ட விதிமுறைகளை பின்பற்றுவதை நிராகரிக்கும் பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள். அத்துடன் பரீட்சை மண்டபத்திற்குள் நுழைந்த வேளை முதல் பரீட்சை நிறைவடைந்து வெளியேறும் வரையில் பரீட்சை மண்டப பணியாளர்கள் விண்ணப்பதாரர்களை அடையாளம் கண்டுகொள்ளக்கூடிய வகையில் முகம் மற்றும் இரண்டு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும். இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் பட்சத்தில் பரீட்சைக்கு தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. இருப்பினும் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்த முடியவில்லை என்பதால் அத்தகைய பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் வெளியிடப்படமாட்டாது.

10. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைக் கொண்டிருப்பவர்கள் மாத்திரமே இப் பரீட்சைக்கு விண்ணப்பித்திருப்பார்கள் எனும் முன் தீர்மானத்துடன் விண்ணப்ப இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னராக உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி அதற்குரிய பற்றுச் சீட்டுடன் சரியாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களை அனுப்பிவைத்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நிகழ்நிலை மூலமாக மாத்திரம் அனுமதி அட்டை வெளியிடப்படும். விண்ணப்பதாரர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டை வெளியிடப்பட்ட உடன் அது தொடர்பில் குறிப்பிட்ட அறிவித்தல் ஒன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தில் பிரசுரிக்கப்படும். தமக்குரிய அனுமதி அட்டை கிடைக்கப்பெறவில்லை எனின் பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பில் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறியத் தரல் வேண்டும். அவ்வாறு அறிவிக்கும் போது விண்ணப்பதாரரின் முழுப் பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணப்பித்த பரீட்சையின் பெயரைக் குறிப்பிட வேண்டும். கொழும்பிற்கு வெளியே வசிக்கும் விண்ணப்பதாரர் ஒருவராயின், அவ் விபரங்களுடன் அனுமதி அட்டையின் பிரதி ஒன்றை அனுப்பி வைக்கக் கூடிய தொலைநகல் இலக்கமொன்றுடன் கோரிக்கைக் கடிதம் ஒன்றை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி வைத்து விசாரிப்பது வினைதிறன் மிக்கதாக இருக்கும். பரீட்சைத் திணைக்களத்தினால் விசாரிக்கப்படும் சந்தர்ப்பத்தில் தேவைப்படின் விண்ணப்பதாரரின் பரீட்சார்த்தி அந்தஸ்தை உறுதிப்படுத்துவதற்காக தாம் வைத்திருந்த விண்ணப்பப்படிவத்தின் பிரதி மற்றும் பரீட்சைக்கு கட்டணம் செலுத்தியிருப்பின் அதற்கான பற்றுச்சீட்டு மற்றும் விண்ணப்பப்படிவத்தை பதிவுத் தபால் மூலமாக அனுப்பி வைக்கும் போது வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு ஆகியவற்றை தம்வசம் தயார் நிலையில் வைத்திருப்பது பிரயோசனமானதாக இருக்கும். விண்ணப்பதாரர் ஒருவருக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்குவதானது அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகுதியுடையவர் எனவோ பதவியொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு தகுதியுடையவர் எனவோ ஏற்றுக் கொள்ளப்பட்டதாக கருதப்படமாட்டாது.

11. மேலே 10 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளை நிறைவுசெய்யத் தவறும் பட்சத்தில் விண்ணப்ப தாரரால் பின்னராக சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பில் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

12. பரீட்சைக்கான அனுமதி அட்டையில் விண்ணப்பதாரரின் கையொப்பம் அவரது நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரால் சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் முதல் நாளன்று பரீட்சை மண்டப பிரதானியிடம் தாம் கையொப்பமிட்டு உறுதிப்படுத்திக்கொண்ட அனுமதி அட்டையினை சமர்ப்பித்தல் வேண்டும். முறையாக பூரணப்படுத்தப்பட்ட தமது அனுமதி அட்டையை சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது.

13. பரீட்சைக் கட்டணம்:

(அ) இப் பரீட்சைக்காக அறவிடப்படும் கட்டணம் எந்தவொரு காரணத்திற்காகவும் திரும்பச் செலுத்தப்படமாட்டாது என்பதுடன், வேறு பரீட்சையொன்றிற்கான கட்டணமாக மாற்றுவதற்கும் இடமளிக்கப்படமாட்டாது.

(ஆ) இப் பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரர்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டும் :

i. முதலாவது தடவை கட்டணம் அறவிடப்படமாட்டாது.
ii. அதன் பின்னர் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பரீட்சைக் கட்டணம் அறவிடப்படும்.

| | |
|---|---|
| முழுமையான பரீட்சைக் கட்டணம் | ரூ.500.00 |
| ஒரு பாடத்திற்கான கட்டணம் | ரூ. 250.00 |

பரீட்சைக்கான கட்டணம் செலுத்தும் போது நிகழ்நிலை முறைமையூடாக கீழ்வரும் கட்டணம் செலுத்தும் முறைகளூடாக மாத்திரமே செலுத்தப்படல் வேண்டும் :

i. எந்தவொரு வங்கிக் கடன் அட்டை மூலமாகவும் (Any Bank Credit Card)
ii. இணைய வசதியுடன் கூடிய எந்தவொரு வங்கியின் வைப்பு அட்டை மூலமாகவும் (Any Bank Debit Card with the Facility of Internet Transactions)
iii. இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி மூலமாக (Online Banking Method of Bank of Ceylon)
iv. எந்தவொரு இலங்கை வங்கிக் கிளை மூலமாகவேனும் (Any Branch of the Bank of Ceylon)

குறிப்பு :

(அ) மேற்கூறப்பட்ட முறைகளூடான கட்டணம் செலுத்தும் முறை தொடர்பில் ஆலோசனைகள் இணையத்தளத்தின் பரீட்சைக்குரிய தொழில்நுட்ப ஆலோசனைகளின் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

(ஆ) கட்டணம் கிடைக்கப்பெற்றதாக குறுந்தகவல் (SMS) மூலமாக அல்லது மின்னஞ்சல் மூலமாக அறியத்தரப்படும். பரீட்சை கட்டணத்திற்காக முழுத் தொகையினையும் செலுத்த வேண்டும் என்பதுடன், பரீட்சைக் கட்டணத்தைக் குறைவாக அல்லது அதிகமாக செலுத்தியுள்ள விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள கட்டணம் செலுத்தும் முறைகளூடான பரீட்சைக் கட்டணம் செலுத்தும் போது ஏற்படக்கூடிய கோளாறுகள் தொடர்பில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பொறுப்பேற்காது.

14. பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து விண்ணப்பதாரர்களதும் பெறுபேறுகள் உள்ளடங்கிய ஆவணமொன்று பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் கல்வி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்படும். விண்ணப்பதாரர்களுக்கு தனிப்பட்ட ரீதியில் பெறுபேறுகளை வழங்கும் பணிகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் மேற்கொள்ளப்படமாட்டாது.

15. பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் ஆகியன தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்ட விதிமுறைகளுக்கு பரீட்சார்த்திகள் உட்படுவர். அச் சட்ட விதிமுறைகள் மீறப்படும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் உட்பட வேண்டும்.

16. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்படும் இவ் அறிவித்தலில் மொழிகளுக்கிடையே ஏதேனும் பொருத்தப்பாடற்ற தன்மை அவதானிக்கப்படும் பட்சத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.

17. இவ் அறிவித்தலில் உள்ளடங்காத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அது தொடர்பில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் கல்வி அமைச்சின் செயலாளரைச் சாரும்.

நாலக களுவெவ,
செயலாளர்.

கல்வி, உயர் கல்வி, மற்றும் தொழிற் கல்வி அமைச்சு,
இசுருபாய,
பத்தரமுல்ல,
2025, சனவரி 02.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரம் III உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை – 2025**

**First Bar Examination for the Officers in Grade III of Sri Lanka Teacher Educators' Service-2025**

விண்ணப்பப்படிவங்களை "பரீட்சை ஆணையாளர் நாயகம், நிறுவனப் பரீட்சைகள் ஒழுங்குபடுத்தல் கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், தபால் பெட்டி இலக்கம் 1503, கொழும்பு." எனும் முகவரிக்கு நிறுவனத் தலைவரூடாக பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். (பரீட்சையின் பெயர் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.)

உத்தியோகத்தர் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் - சிங்களம்- 2
தமிழ் - 3 ☐
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

01. (i) முழுப் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) : ..............................................................
(உ+ம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

(ii) இறுதியில் உள்ள பெயர் முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்களும் பின்னரும் வரும் வகையில் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :..............................................................
(உ+ம் : GUNAWARDHANA, H.M.S.K.)

(iii) முழுப் பெயர் (சிங்களம்/ தமிழில்) : ..............................................................

02. (i) சேவையாற்றும் கல்வியியல் கல்லூரி/ ஆசிரியர் கல்லூரி/ ஆசிரியர் நிலையம் மற்றும் முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) அனுமதி அட்டை இம் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும் :

………………………………………………………………………………………………………………

(ii) தனிப்பட்ட முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்):

………………………………………………………………………………………………………………

03. தொலைபேசி இலக்கம் :

(i) கையடக்க : ☐☐☐☐☐☐☐☐☐☐

(ii) நிலையான : ☐☐☐☐☐☐☐☐☐☐

04. (i) தேசிய அடையாள அட்டை இலக்கம்: ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

(ii) பெண்/ ஆண் பாலினம்: ஆண் - 0 ☐

பெண் - 1

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்.)

05. (i) பிறந்த திகதி : வருடம் : ☐☐☐☐ மாதம் : ☐☐ நாள் : ☐☐

(ii) பதவிப் பெயர் : ......................................................

06. அறிவித்தலின் இரண்டாம் பந்தியின் (அ) இன் கீழ் தரப்பட்டுள்ள பாட இலக்கம் மற்றும் பாடம் உட்பட விண்ணப்பிக்கும் பாடங்களை தெளிவாக குறிப்பிடவும்.

| *பாடம்* | *பாட இலக்கம்* |
|---|---|
| | |
| | |
| | |
| | |

07. இதற்கு முன்னராக இப் பரீட்சைக்கு முழுமையாகவோ அல்லது ஒரு பகுதிக்கோ தோற்றியிருப்பின் அப் பாடங்கள் மற்றும் தோற்றிய வருடம் மற்றும் மொழி மூலத்தைக் குறிப்பிடவும்.

| *பாடம்* | *வருடம்* | *மொழி மூலம்* | *பரீட்சை சுட்டெண்* |
|---|---|---|---|
| | | | |
| | | | |

08. (i) தாங்கள் விசேட தேவைகளுடன் கூடிய விண்ணப்பதாரியா? (ஆம்/ இல்லை)

(ii) ஆம், எனின் விசேட தேவையின் தன்மை: ………………………………………………………………

………………………………………………………………………………………………………………

09. மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை எனவும், வர்த்தமானி அறிவித்தலின் 04 ஆம் பந்திக்கமைய தரப்பட்டுள்ள மொழிமூலத்தில் இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எனக்கு உரித்துள்ளது என உறுதியளிக்கின்றேன். அத்துடன், பரீட்சையை நடாத்துதல் மற்றும் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்ட விதிமுறைகளுக்கு நான் உட்படுவேன் என உறுதியளிக்கின்றேன்.

................................

விண்ணப்பதாரரின் கையொப்பம்

திகதி :.........................................

10. **கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்**

எனது தேசிய கல்வியியல் கல்லூரி/ ஆசிரியர் கல்லூரி/ ஆசிரியர் நிலையத்தின் உத்தியோகத்தர் என்ற வகையில் நான் தனிப்பட்ட ரீதியில் நன்கறிந்தவராகிய திரு./ திருமதி/ செல்வி ...................................................... அவர்கள் ......................... ஆந் திகதியன்று எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதையும், உரிய பரீட்சைக் கட்டணத்திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்/ உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி அதற்குரிய பற்றுச் சீட்டு ஒட்டப்பட்டுள்ளதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

......................................................
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம் மற்றும் பதவி முத்திரை
(அண்மித்த பதவி நிலை உத்தியோகத்தர்)

பெயர் : ……………………………………….
பதவிப் பெயர் : ……………………………………….
முகவரி : ……………………………………….
திகதி : ……………………………………….

11. பரீட்சை ஆணையாளர் நாயகம்,
இலங்கை பரீட்சைகள் திணைக்களம்.

மேலே விபரங்கள் தரப்பட்டுள்ள விண்ணப்பதாரருக்கு இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகள் உள்ளதாகவும், வர்த்தமானி அறிவித்தலின் 04 ஆம் பந்திக்கமைய அவர் குறிப்பிட்டுள்ள மொழிமூலத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவருக்கு தகுதியுள்ளது என்பதை நான் உறுதிப்படுத்துகின்றேன். விண்ணப்பதாரர் பரீட்சைக் கட்டணத்திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளாரென / உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி பற்றுச் சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்பதையும் சான்றுப்படுத்துகின்றேன்.

............................................................
பீடாதிபதியின்/ ஆசிரியர் அதிபரின்/ நிலைய முகாமையாளரின்
கையொப்பம்.

பதவிப் பெயர் : …………………………………
(பதவி முத்திரை கொண்டு உறுதிப்படுத்தவும்.)
(பொருத்தமற்ற பகுதிகளை வெட்டி விடவும்.)

01-194

---

## நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

## அரசாங்க விலைமதிப்புத் திணைக்களம்

**அரசாங்க விலைமதிப்புத் திணைக்களத்தின் வெளிக்கள / அலுவலக முறைப்பட்ட - தொகுதி 2 சேவை வகுதியைச் சேர்ந்த தரம் II வகுப்பு II உதவி மதிப்பீட்டாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2024**

அரசாங்க விலைமதிப்புத் திணைக்களத்தின் தரம் II வகுப்பு II உதவி மதிப்பீட்டாளர் 184 பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் 2025ஆம் ஆண்டு கொழும்பில் நடாத்தப்படும். பரீட்சை நடைபெறும் திகதி உரியவாறு பத்திரிகை மூலம் அறியத்தரப்படும். இந்தப் பரீட்சையை பின்போடும் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம் பிரதம விலை மதிப்பீட்டாளருக்கு உண்டு.

கீழ்க் காணும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள ஆண்/ பெண் இருபாலாரிடமிருந்தும் இப்பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **தகைமைகள்.-**

i. **கல்வித் தகைமைகள்** :

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆதன முகாமைத்துவம் மற்றும் விலைமதிப்பு பற்றிய விஞ்ஞான இளமாணிச் சிறப்பு பட்டம் அல்லது ஐக்கிய இராச்சியத்தின் பட்டய நில அளவையாளர் நிறுவனத்தின் அங்கத்துவத்துடன் கூடிய விலைமதிப்பீட்டாளராக இருத்தல்.

ii. **உடல் தகைமைகள்** :

சகல விண்ணப்பதாரிகளும் நாட்டின் எப்பாகத்திலும் சேவை புரிவதற்கும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதிய உள, உடல் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

iii. **வேறு தகைமைகள்** :

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

(ஆ) சிறந்த நல்லொழுக்கம் உடையவராக இருத்தல் வேண்டும்;

(இ) விண்ணப்பதாரி ஏற்புடைய அனைத்து தகைமைகளையும் 2024, திசெம்பர் 31 ஆந் திகதிக்கு பூர்த்தி செய்திருந்தால் மாத்திரமே சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்குத் தேவையான தகைமைகளை பூர்த்தி செய்துள்ளவராக கருதப்படுவார்.

02. **வயதெல்லை.-**

i. ஆகக் குறைந்த வயதெல்லை 21 வயதுக்குக் குறையாதவராக இருத்தல்.

ii. உச்ச வயதெல்லை - 35 வயதிக்கு மேற்படாத (அதற்கமைய 2003.12.31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னரும் 1989.12.31 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னரும் பிறந்த விண்ணப்பதாரிகள் மட்டும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கத் தமைமை பெறுவர்.)

குறிப்பு.-

i. எந்தவொரு சமயப் பிரிவையும் சேர்ந்த குருத்துவத்தைப் பெற்றுள்ள எவரும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

ii. பட்டப் பரீட்சையின் பெறுபேறுகளை எதிர்பார்த்துள்ள எந்தவொரு அபேட்சகருக்கும் இந்தப் பரீட்சைக்குத் தோற்ற முடியாது. எவ்வாறெனினும் மேற்படி தகைமைக்குரிய பட்டப் பரீட்சையில் சித்திடைந்த ஒருவருக்கு அந்தப் பட்டம் 2024, திசெம்பர் 31 ஆந் திகதிக்கு பூரணப்படுத்தப்பட்டுள்ளதென அந்தப் பல்கலைக்கழகத்தின் பதிவாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட உத்தியோகபூர்வ கடிதத்தை சமர்ப்பிக்குமிடத்து அக்கடிதத்தை உறுதிப்படுத்திக் கொண்ட பின்னர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்படும்.

03. **சேவை நிபந்தனைகள்.-**

I. **சம்பளம்** :

i. இந்தப் பதவிக்கான திரட்டிய சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 3/ 2016 இற்கு அமைய சம்பள அளவுத் திட்டம் MN-5 எனும் சம்பள வகுதியின் ரூ.34,605.00-10x660-11x755- 15x 930- ரூ. 63,460.00 ஆகும்.

ii. இப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். ஓய்வூதியத்திட்டம் தொடர்பில் அரசாங்கத்தினால் இனிவரும் காலங்களில் எடுக்கப்படுகின்ற கொள்கைத் தீர்மானங்களுக்கு கட்டுப்படுதல் வேண்டும்.

iii. தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் நியமனத் திகதியிலிருந்து மூன்று (03) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுத்தப்படுவர்.

iv. நியமனம் பெறும் அபேட்சகர்கள் நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு பொருத்தமானவரா என்பது பற்றிய உடல் தகைமையை பரீட்சிப்பதற்கு அரசாங்க மருத்துவ அதிகாரி ஒருவரால் நடாத்தப்படும் மருத்துவப் பரிசோதனைக்கு தோற்றுதல் வேண்டும்.

v. நியமனம் பெறும் அபேட்சகர்கள் நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு கட்டுப்பட்டிருத்தல் வேண்டும்.

vi. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் இலக்கம் 2310/ 29 இல் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு மற்றும் இவ் வர்த்தமானி அறிவித்தலில் பகுதி I தொகுதி (IIஅ) வின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவையின் பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்கான பொதுவான நிபந்தனைகளுக்கும் கவனம் ஈர்க்கப்படுகிறது.

vii. இந்தப் பதவி இலக்கம் 2142/ 75 மற்றும் 2019.09.27 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை விலைமதிப்பீட்டாளர் சேவையின் பிரமாணக் குறிப்பினால் கட்டுப்படுத்தப்படும்.

04. **ஆட்சேர்ப்புச் செய்யும் முறை**.-

எழுத்து மூலப் போட்டிப் பரீட்சை மற்றும் பொதுவான நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும். எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகளின் மொத்தப் புள்ளிகளின் திறமை ஒழுங்கிற்கு அமைய ஆட் சேர்ப்பதற்கு உத்தேசிக்கப்படும் எண்ணிக்கைக்குச் சமமான தொகையினர் பொதுவான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு தகைமையுள்ளவர்கள் ஆட்சேர்க்கப்படுவர். நேர்முகப்பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. அதன் போது ஏற்புடைய தகைமைகள் மாத்திரம் பரீட்சிக்கப்படும்.

05. **பரீட்சைத் திட்டம்**.-

ஆட் சேர்ப்புக்கான போட்டிப்பரீட்சை எழுத்துமூல வினாப்பத்திரத்தைக் கொண்டது. அது தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.-

| *பாட இலக்கம்* | *வினாப்பத்திரத்தின் பெயர்* | *காலம்* | *சித்தியடைவதற்குப் பெற்றுக்கொள்ள வேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகள்* | *உச்சப் புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| 01 | பொது நுண்ணறிவுப் பரீட்சை மற்றும் உளச்சார்பு வினாப்பத்திரம் | 02 மணித்தியாலங்கள் | 40 | 100 |

(அ) பொது நுண்ணறிவுப் பரீட்சை மற்றும் உளச்சார்பு வினாப்பத்திரம்

கணிதம் மற்றும் தர்க்கரீதியான பாடப்பரப்புடன் கூடிய பல்தேர்வு மற்றும் கட்டமைக்கப்பட்ட வினாக்கள் உள்ளடக்கப்படும்.

**குறிப்பு**.- இந்தப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பிக்கும் ஊடக மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

i. தெளிவற்ற கையெழுத்து மற்றும் எழுத்துப்பிழைகளுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

ii. பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பித்த பரீட்சார்த்திகளுக்கு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் வழங்கப்படும். எனினும் பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதி அட்டைகள் பெறுவது பரீட்சைக் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதாக கருதக்கூடாது.

iii. மதிப்பீட்டு முறை போட்டிபரீட்சையின் வினாத்தாளில் 40 வீதம் அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, புள்ளிகளுக்கு ஏற்ப முன்னுரிமைப் பட்டியல் தயாரிக்கப்படும். அவர்களில் அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொண்டுள்ள விண்ணப்பதாரர்களிலிருந்து நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பல விண்ணப்பதாரர்கள் பொதுவான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

06. **தெரிவு செய்யும் முறை**.-

எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடைந்த மற்றும் நேர்முகப் பரீட்சையில் தகைமைபெற்ற அபேட்சகர்கள் ஏற்புடைய ஆட்சேர்ப்புக்குரிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு உட்பட்ட வகையில் நியமனம் வழங்குவதற்கு தெரிவு செய்யப்படுவர்.

i. **பெறுபேறுகளை வெளியிடல்:**

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தினால் எழுத்துமூலப் பரீட்சையின் மொத்தப் புள்ளிகளை திறமை அடிப்படையில் தயாரித்து இறுதிப் பெறுபேற்று ஆவணம் பிரதம மதிப்பீட்டாளருக்கு வழங்கப்படும். பதவிகளுக்கான நியமனம் நிறைவடைந்துள்ளதாக பிரதம விலைமதிப்பீட்டாளர் அறிவித்த பின்னர் பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் தபால் மூலம் தனிப்பட்ட முறையில் பெறுபேறுகள் அறிவிக்கப்படும்.

07. அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் பதவிக்குரிய தகைமைகளை பதவிக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளபடும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

08. **விண்ணப்பிக்கும் முறை.-**

**மாதிரி விண்ணணப்பப்படிவம்** :

(i) இந்த அறிவித்தலின் இறுதியில் வெளியிடப்பட்டுள்ளது போன்று விண்ணப்பதாரர்கள் இந்த மாதிரி விண்ணப்பப்படிவத்தை தாங்கள் பரீட்சைக்குத் தோற்றும் மொழியில் தயார் செய்து தங்கள் சொந்த கையெழுத்தில் பூர்த்தி செய்தல் வேண்டும். விண்ணப்பதாரர்கள் அறிவுறுத்தலின் படி விண்ணப்பத்தின் ஒவ்வொரு பகுதியையும் பூர்த்தி செய்தல் வேண்டும். ஏதேனும் பிரிவுகள் தங்களுக்கு ஏற்புடையதல்ல எனின் "ஏற்புடையதல்ல" எனக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பத்தில் வெற்று நெடுவரிசைகளை விடுவது விண்ணப்பம் நிராகரிக்கப்பட காரணமாக அமையலாம் என்பதை நினைவில் கொள்ளவும் (பக்கம் 1 இல் தலைப்பு 01 முதல் 05 வரையிலும் பக்கம் இரண்டில் தலைப்புகள் 06 முதல் 11 வரையிலும் மீதமுள்ளவை பக்கம் மூன்றிலும் A4 அளவுத் தாளில் மாதிரி விண்ணப்பத்தைத் தயாரிக்கவும்.) விண்ணப்பத்தைத் தாயரிக்கும் போது பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் எழுதப்படல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தின் பிரதியொன்றை வைத்திருப்பது உதவியாக அமையும்.

**வீண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி:**

(ii) விண்ணப்பங்கள் "அரசாங்க பிரதம மதிப்பீட்டாளர், மதிப்பீட்டு இல்லம், இல.748, மருதானை வீதி, கொழும்பு 10" என்ற முகவரிக்கு 2025, பெப்புருவரி மாதம் 07 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அந்த திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் " உதவி விலைமதிப்பீட்டாளர் தரம் II வகுப்பு II பதவிக்கு ஆட் சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை" எனப் பரீட்சையின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

**பரீட்சைக் கட்டணம்** :

(iii) அரசாங்க மதிப்பீட்டுத் திணைக்களத்தின் பிரதம மதிப்பீட்டாளரின் வருமானத் தலைப்பு இல. 236100189026654 இன் கீழ் ஏதேனும் ஓர் மக்கள் வங்கிக் கிளையில் பரீட்சைக் கட்டணமாக ரூ. 1,000.00 செ லுத்தியதற்கான ரசீதை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும் பரீட்சைக் கட்டணமாக காசுக் கட்டளைகள் அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. மேலும் எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது அல்லது வேறு பரீட்சைக்கு மாற்றப்பட மாட்டாது. விண்ணப்பதாரர்கள் பணம் செலுத்திய ரசீதின் நிழற் பிரதியை தங்களிடம் வைத்திருப்பது சிறந்தது.

**தற்போது அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் :**

(ii) தற்போது அரசாங்க திணைக்களங்கள்/ சபைகள்/கூட்டுத்தாபனங்கள் போன்றவற்றில் பணிபுரியும் விண்ணப்பதாரர்கள் தாங்கள் பணிபுரியும் திணைக்கள அல்லது நிறுவனத்தின் தலைவர் ஊடாக விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பங்களை 2025.02.07 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ அரசாங்க பிரதம விலைமதிப்பீட்டாளருக்கு அனுப்புமாறு கோரிக்கை விடுத்து தங்களது திணைக்களத் தலைவர்களிடம் நேரகாலத்துடன் விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர். விண்ணப்பங்களை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தின் பெயரிற்கோ அல்லது மேற்படி நிறுவனத்தின் வேறு எந்த அதிகாரியின் தனிப்பட்ட பெயருக்கோ அனுப்பக்கூடாது.

திணைக்களத்தால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் உரிய திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறுமிடத்து நிராகரிக்கப்படும். தற்போது அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளின் கையொப்பத்தை சான்றளிக்கும் போது உரிய திணைக்கள/ நிறுவனத் தலைவரின் கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை பொறிக்கப்படாவிட்டால் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**விண்ணப்பங்களை அத்தாட்சிப்படுத்தல்** :

(v) தற்போது அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரரின் கையொப்பம் ஏற்புடைய திணைக்களத் தலைவர் அல்லது அவர் சார்பாக அவ்வாறு செய்ய அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரியால் அத்தாட்சிப்பத்தப்படல் வேண்டும்.

**பரீட்சை அனுமதி அட்டைகள் :**

(i) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் மட்டும் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற ஊகத்தின் அடிப்படையில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்குள் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான இறுதித் திகதியில் அல்லது அதற்கு முன், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி, அதற்குரிய ரசீதுடன் பரீட்சையில் தோற்றும் மொழிமூலம்,

விண்ணப்பதாரியின் கையொப்பம் மற்றும் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் மற்றும் ஏற்புடையதாயின் திணைக்களத் தலைவரின் சான்றிதழுடன் சரியாக பூர்த்தி செய்து விண்ணப்பங்களை அனுப்பிய விண்ணப்பதாரர்களுக்கு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும். அனுமதி அட்டைகள் வழங்கப்பட்ட உடனே அது பற்றிய பத்திரிகை அறிவித்தல் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தினால் வெளியிப்படும் . அறிவித்தல் வெளியிடப்பட்டு இரண்டு அல்லது மூன்று நாட்கள் கழித்து அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத பரீட்சார்திகள் அறிவித்தலில் உள்ளவாறு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்திற்கு அது பற்றி அறிவித்தல் வேண்டும். இவ்வாறு அறிவிக்கும் போது, விண்ணப்பதாரி தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், முகவரி, தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் ஆகிய விபரங்களை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன், விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வசிப்பிடத்தைக் கொண்டவராக இருப்பின் தொலைநகல் மூலம் பரீட்சை அனுமதி அட்டையின் பிரதியொன்றை அனுப்புவதற்கு வசதியாக மேற்சொன்ன விபரங்களுடன் தொலைநகல் இலக்கமொன்றையும் குறிப்பிட்டு, தமது கோரிக்கைக் கடிதத்தை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்திற்கு அனுப்புவதன் மூலம் விசாரிப்பது சாலச் சிறந்ததாக அமையும். இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்துடன் தொடர்பு கொள்ளும் சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரி ஏற்கனவே தம் வசம் வைத்துக்கொண்ட விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதி, பரீட்சை கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டின் நிழற்படப்பிரதி, விண்ணப்பப்படிவத்தை பதிவுத் தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டு ஆகிய ஆவணங்களைத் தயார் நிலையில் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்.

**பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை அத்தாட்சிப்படுத்தல் :**

(ii) தற்போது அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களின் கையொப்பம் உரிய திணைக்களத் தலைவர் அல்லது அவர் சார்பாக அவ்வாறு செய்ய அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரியால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும். மற்ற விண்ணப்பதாரார்களின் கையொப்பங்கள் அத்தாட்சிப்படுத்த அங்கீரிக்கப்பட்ட ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும். அதாவது சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, நொத்தாரிசு, அரசாங்கப் பாடசாலையின் அதிபர், கடற்படை, விமானப்படை அல்லது இராணுவத்தின் ஆணைபெற்ற அதிகாரி, அரசாங்க நிரந்தர சேவையில் பணிபுரியும் பதவிநிலை உத்தியோகத்தர், விகாரை அல்லது பௌத்த விகாரையின் தலைமை பிக்கு ஏனைய மத வழிபாட்டுத் தளங்களுக்குப் பொறுப்பான அல்லது மதகுருமார்களின் குறிப்பிடத்தக்க அந்தஸ்தை வகிக்கும் ஒருவராக இருத்தல் வேண்டும்.

**பரீட்சைக்குத் தோற்றுதல் :**

(iii) ஒவ்வொரு பரீட்சார்த்தியும் அனுமதி அட்டையில் தனது கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். பரீட்சார்திகள்,தமக்கு விதிக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்கள் தங்களின் கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை பரீட்சை மண்டபத்தில் பரீட்சை நிலைய அதிபரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டையை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதி வழங்கப்பட மாட்டாது.

(iv) விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதாக விண்ணப்பதாரர்களுக்கு அறிவிக்கப்பட மாட்டாது. மேலும் பரீட்சைகளை நடத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்டுள்ள சட்ட விதிகளுக்கு விண்ணப்பதாரர்கள் கட்டுப்படுதல் வேண்டும். அவ்வாறு அந்த விதிகளை அவர் மீறினால் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு அடிபணிய வேண்டும்.

குறிப்பு : பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சை அனுமதி அட்டையொன்றை விநியோகிப்பதானது அப் பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுவதற்கும், பதவியொன்றை வகிப்பதற்கும் தேவையான எல்லாத் தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளார் என்பதாக கருதப்பட மாட்டாது.

10. **பரீட்சார்த்தியின் ஆள் அடையாளம் .-**

பரீட்சார்த்தியானவர் பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் பாடத்திற்கு பரீட்சை மேற்பார்வையாளர் திருப்பதிப்படும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும் என்பதுடன் இதற்காக பின்வரும் ஆவணங்களுள் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்:

(அ) ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை;
(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு;
(இ) செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணமொன்றைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

11. **பொய்யான தகவல்களை வழங்குதல்.-**

இந்தப் பரீட்சையின் விதிமுறைகளின்படி எவரேனுமொரு விண்ணப்பதாரி அப்பரீட்சையில் தோற்றுவதற்குத் தகுதியற்றவர் எனக் கண்டறிப்பட்டால், அவரது பரீட்சார்த்த தகைமை பரீட்சைக்கு முன்போ அல்லது பரீட்சையின் போது அல்லது அதன்பின்னர் எந்த நேரத்திலும் இரத்துச் செய்யப்பட்டலாம். ஒரு விண்ணப்பதாரர் தெரிந்தே தவறான தகவலை அளித்ததாகவோ அல்லது தெரிந்தே ஏதேனும் உண்மையை மறைத்ததாகவோ தெரியவருமிடத்து அல்லது அவர் இந்தப் பரீட்சையில் தோற்றுவதற்கு தகுதியற்றவராக இருந்துள்ளார் என அவருடைய சேவைக் காலத்தில் எந்த நேரத்திலும் நிரூபிக்கப்பட்டால் அவர் உடனடியாக பணிநீக்கம் செய்யப்படுவார்.இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளை உரிய முறையில் பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரர்களின் பரீட்சார்த்த தகைமை இரத்துச் செய்யப்படும்.

12. இவ் அறிவித்தல் மூலம் ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் விடயங்கள் தொடர்பில் பிரதம விலை மதிப்பீட்டாளரினால் தீர்மானிக்கப்படுகின்றவாறு நடவடிக்கை எடுக்கப்படும்.

13. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய வர்த்தமானி அறிவித்தல்களுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்படும் பட்சத்தில் அல்லது பொருந்தாத சந்தர்ப்பங்களில் சிங்கள மொழியிலான அறிவித்தல் மேலோங்கி நிற்கும்.

ஏ.எஸ். டபிள்யூ. கே. நானாயக்கார,
அரசாங்க பிரதம மதிப்பீட்டாளர்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அரசாங்க மதிப்பீட்டாளர் சேவையின் வெளிக்கள/ அலுவலக முறைப்பட்ட - தொகுதி 2 சேவை வகுதியைச் சேர்ந்த தரம் II வகுப்பு II உதவி மதிப்பீட்டாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை -2024**

**கவனிக்க-** விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "உதவி மதிப்பீட்டாளர் தரம் II வகுப்பு II பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை" எனப் பரீட்சையின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும் . விண்ணப்பங்களை பதிவுத் தபாலில் "அரசாங்க பிரதம மதிப்பீட்டாளர், மதிப்பீட்டு இல்லம், இல. 748, மருதானை வீதி, கொழும்பு 10" என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

☐

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்

சிங்களம்-2, தமிழ்-3, ஆங்கிலம் - 4 ☐

(கூட்டினுள் உரிய இலக்கத்தை எழுதுக)

1. விண்ணப்பதாரியின் பெயர் ;

1.1 முதலெழுத்துக்களை இறுதியில் குறிப்பிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துகளில்) :............
........................................................................................................................................................
........................................................................................................................................................
(உதாரணம்; SILVA, A.B.)

1.2 முழுப்பெயர்:.........................................................................................................................................
........................................................................................................................................................
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்துகளில்)

1.3 முழுப் பெயர்: ......................................................................................................................................
........................................................................................................................................................
(சிங்களத்தில்/ தமிழில்)

2. நிரந்தர முகவரி ( சிங்களத்தில்/ தமிழில்) : ..........................................................................................................
........................................................................................................................................................
(முகவரி மாற்றடையும் போது அது தொடர்பில் உடனடியாக அறிவித்தல் வேண்டும்)
பரீட்சை அனுமதி அட்டையை அனுப்ப வேண்டிய முகவரி ( ஆங்கில கெப்பிற்றல் எழுத்துகளில்)
........................................................................................................................................................
........................................................................................................................................................

3. பால் - ஆண்- 0, பெண் -1
(கூட்டினுள் உரிய இலக்கத்தை எழுதுக) ☐

4. தேசிய ஆளடையாள அட்டை இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

5. கையடக்கத் தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

6. திருமணமானவரா/திருமணமாகாதவரா (திருமணமாகாதவர்-1, திருமணமானவர் 2):
(கூட்டினுள் உரிய இலக்கத்தை எழுதுக) ☐

7. இனம் ( சிங்களம்-1, தமிழ்-2, இ. தமிழ்-3, முஸ்லிம்-4, வேறு- 5)
(கூட்டினுள் உரிய இலக்கத்தை எழுதுக) ☐

8. பிறந்த திகதி: வருடம் : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு வயது : வருடங்கள் : ☐☐ மாதங்கள்: ☐☐ நாட்கள்: ☐☐

9. தாங்கள் இலங்கைப் பிரசையாக இருப்பது பரம்பரை மூலமா அல்லது பதிவின் மூலமா?
(பதிவின் மூலம் எனின் சான்றிதழின் விபரங்களை குறிப்பிடுக)

10. கல்வி/தொழிற் தகைமைகள் :

| *பரீட்சை/ பட்டம்* | *செல்லுபடியாகும் திகதி* | *பல்கலைக்கழகம்/ நிறுவனம்* | *பாடங்கள்* |
|---|---|---|---|
| | | | |

11. தற்போது தொழில் மற்றும் ஏற்கனவே பதவி வகித்திருப்பின் அது பற்றிய தகவல்கள்

| *பதவி* | *முதல்* | *வரை* | *வருடாந்தச் சம்பளம்* |
|---|---|---|---|
| | | | |

12. நீங்கள் அரசாங்க சேவையில் பதவியொன்றை வகித்து வந்த வேளை பதவி நீக்கப்பட்ட ஒருவரா?
(அவ்வாறெனின் விபரங்களைத் தருக)
..........................................................................................................................................

13. தங்களுக்கு எதிராக ( தற்போது அரசாங்க சேவையில் இருப்பவராயின் ) திணைக்கள ஒழுக்காற்று விசாரணைகள் ஏதும் உண்டா?
..........................................................................................................................................

14. தாங்கள் ஏதேனும் குற்றவியல் குற்றத்திற்கு நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா?
..........................................................................................................................................

15. பரீட்சைக் கட்டணம் (ரசீதின் மூலப் பிரதி ஒட்டப்பட்டிருத்தல் வேண்டும்)

i. பணம் செலுத்தப்பட்ட மக்கள் வங்கி கிளை :..........................................................................
ii. செலுத்திய தொகை :............................................................................
iii. செலுத்திய திகதி :............................................................................
iv. பற்றுச்சீட்டு இல. :............................................................................

| பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை இங்கே ஒட்டவும். |
|---|

(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தம் வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்)

16. **விண்ணப்பதாரியின் உறுதியுரை**

இந்த விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகல்கள் உண்மையானதும் சரியானதுமென உறுதியுரைக்கின்றேன். அங்கு உள்ளடக்கப்பட்டுள்ள ஏதேனும் தகவல் போலியானது அல்லது தவறானது என நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் தெரியவருமிடத்து, நான் தகுதியற்றவனாக ஆக்கப்படுவேன் எனவும் நியமனத்தின் பின்னர் தெரியவரும் பட்சத்தில் எந்தவித உரிமைகளும் இன்றி பதவி நீக்கத்திற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன். மேலும், பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்படுவேன் எனவும் உறுதியுரைக்கின்றேன்.

..........................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி :............................

17. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் ( ஏற்புடையதாகாத சொற்களை வெட்டி விடவும்)

இவ் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ................ (முழுப்பெயர்) என்பவரை தனிப்பட்ட முறையில் நான் நன்கு அறிவேன் என்பதையும், இவர் என் முன்னிலையில் 2025......... மாதம் ........... ஆந் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் என்பதையும் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்பதையும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

...............................................
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்

அத்தாட்சிப்படுத்துபவரின் முழுப் பெயர் :................................................
பதவி :................................................
முகவரி :................................................
( இறப்பர் முத்திரையை இடவும்)
திகதி :................................................

**விண்ணப்பதாரி அரசாங்க/ மாகாண அரசாங்க சேவையில்/ அரசாங்க கூட்டுத்தாபன சேவையில் உள்ளவராயின் நிறுவனத் தலைவரின் சிபாரிசு**

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ........................................... அவர்களை நன்கு அறிவேன் என்றும் அவர் (அமைச்சில்/ திணைக்களத்தில்/ அரச கூட்டுத்தாபனத்தில் ) சேவையில் உள்ளார் என்றும் அவருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகள் ஏதும் இல்லை என்றும் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் என்றும் அவர்............................... ஆந் திகதி என் முன்னிலையில் அவரது கையொப்பத்தை இட்டார் என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். ( மேலும் பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்படுவேன் எனவும் உறுதியுரைக்கின்றேன்)

அவர் அரசாங்க விலைமதிப்பீட்டாளர் சேவையின் வெளிக்கள / அலுவலக முறைப்பட்ட - தொகுதி 2 சேவை வகுதியைச் சேர்ந்த தரம் II வகுப்பு II உதவி விலைமதிப்பீட்டாளர் பதவிக்குத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் இவரை இந்தத் திணைக்களத்தின்/ கூட்டுத்தாபனத்தின் சேவையிலிருந்து விடுவிக்க முடியும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

............................................
நிறுவனத் தலைவரின் கையொப்பம்

நிறுவனத் தலைவரின் முழுப்பெயர் :................................................
பதவி :.........................................................................................
அலுவலக முகவரி :.........................................................................
( பதவி முத்திரையை இடவும்)
திகதி :.........................................................................................

01- 60

## தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்

(கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் வலுவூட்டுகை அமைச்சு)

சமூகப்பணி இளமாணி விசேட பட்டப் பாடநெறிக்கான விண்ணப்பம் கோரல் - 2024/2025 கல்வியாண்டு

தேசிய அபிவிருத்தி நிறுவனம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 25ஏ பந்தியின் கீழ் பட்டம் வழங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்ட உயர்கல்வி நிறுவனமாகும்.இது சமூகப்பணி தொழில்வாண்மைகள் கல்வியினை வழங்கும் இலங்கையிலுள்ள முன்னணி உயர்கல்வி நிறுவனமுமாகும். தற்போது இந் நிறுவனம் கிராமிய அபிவிருத்தி சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சின் கீழ் இயங்கி வருவதுடன் இந்நிறுவனத்தினால் வழங்கப்படும் முழு நேர நான்காண்டு சமூகப்பணி இளமாணி விசேட பட்டப்பாடநெறிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**விண்ணப்பிப்பதற்கான தகைமை:**

2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் எந்தவொரு துறையிலும் தோற்றி பல்கலைக்கழக நுழைவுக்கான அடிப்படைத் தகைமையை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம் இப்பாடநெறிக்கு விண்ணப்பிக்கலாம். ஆங்கில மொழி மூலம் பட்டத்தினை பயிலுவதற்கு கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கில மொழியில் அல்லது கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் பொது ஆங்கில மொழியில் ஆகக் குறைந்தது (C) தரத்தினை பெற்றிருத்தல் கட்டாயமானதாகும்.

**பட்டப்பாடநெறி நடாத்தப்படும் மொழி**: சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம்.

**தெரிவு முறை**:

தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள், பாடநெறியினை பயிலுவதற்கு விண்ணப்பித்த மொழிமூலம் நடாத்தப்படுகின்ற எழுத்து மூல தேர்வுப் பரீட்சைக்கு தோற்ற வேண்டும். எழுத்து மூல தகைமை பெறும் விண்ணப்பதாரிகள் நேர்காணலுக்கு அழைக்கப்படுவதோடு மேற்குறித்த எழுத்துமூலப்பரீட்சை மற்றும் நேர்காணல் திறன்களின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுவர். எழுத்துமூல தேர்வுப் பரீட்சைக்கு விண்ணப்பங்கோரப்படும் இறுதி நாளின் பின்னர் கொழும்பு அல்லது மாகாண மட்டத்தில் பரீட்சை நடாத்தப்படும். தேர்வுப் பரீட்சைக்கு பொது அறிவு மற்றும் பொது உளச்சார்பு வினாக்கள் உள்ளடக்கப்படும்.

பாடநெறிக் கட்டணம் இந்த நான்காண்டு முழு நேர பட்டப்பாடநெறியானது இலவசமாக நடாத்தப்படுவதுடன் பதிவுக் கட்டணமாக ரூ. 35,000.00 அறவிடப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை**:

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் (www.nisd.ac.lk)online மூலம் மாத்திரம் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும்.

**விண்ணப்பிக்கும் இறுதித் திகதி**: 2025, பெப்புருவரி மாதம் 10 ஆந் திகதி.

பதிவாளர்.

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்,
லியனகேமுல்லை,
சீதுவை.
தொ.பே.: 0112882506.
Email: registrar@nisd.ac.lk

01- 183